ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல் ஊராட்சி, இ.வி.பி பிரபு அவென்யூ பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்டோர் உள்ளனர்.

பகுதி இளைஞரணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் தலைமையில்

கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - ஏ.எம்.வி.பிரபாகரராஜா - கே.கண்ணன் திறந்து வைக்கின்றனர்!

சென்னை, மே. 11

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் தெற்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் தலைமையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மற்றும் மோர், பழரசம், பழங்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (11.05.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட், அண்ணா மெயின் ரோடு சந்திப்பில் நடைபெறுகிறது.

பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா எம்.சி ஆகியோர் முன்னிலையில், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பிஎஸ்.முருகேசன், எஸ்டி.தங்கராஜ் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் சோ.செந்தில் குமார், ஜம்பு முருகன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ் செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், கே.சதீஷ்கண்ணன், ஆர்.ராமமூர்த்தி மற்றும் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு, ஆர்.சரவணன், ப.பாலா, என்.எஸ்.தென்னரசு, ரா.நவீன் ஆர்கே.சுந்தர் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன்,

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், மண்டலக்குழுத் தலைவர், சைதை மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எம்.கிருஷ்ண மூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் வே. உமாகாந்த் ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகத் தலைவர்கள், பாக இளைஞரணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொள்கின்றனர்.

துரை வீரமணி தலைமை! இரா.வினோத் வரவேற்புரை! நொளம்பூர் வே.ராஜன் - வீர.கனிமொழி முன்னிலை!

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

திண்டுக்கல் ஐ.லியோனி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மே. 11

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் நான் காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் அயப்பாக்கம் ஊராட்சியில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.வினோத் வரவேற்புரையில் மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், பொதுக்குழு உறுப்பினர் வீர.கனிமொழி ஆகியோர் முன்னிலையில் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு பாடநூல் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர்.

இதில் எஸ்.அருணாச்சலம், பத்மபிரியா, வ.செல்வகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எம்.சபரி ராஜா, டி.லோகேஷ், எம்.அர்ஜுன், பி.மனிஷ், யோகிராம் ஆகியோர் நன்றி கூறினார்.

என்.சந்திரன் தலைமை! ப.குணாளன் முன்னிலை! அரங்கநாதன் - ரிஷி சந்தோஷ் சிறப்புரை!

ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு!

காஞ்சிபுரம்,மே.11

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் நாடு போற்றும் நான் காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்ற தலைப்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (12.05.2025 திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு வேம்புலி அம்மன் கோயில் அருகில் (சுரங்கப் பாதை அருகில்) பழவந்தாங்கலில் பகுதிச் செயலாளர், மண்டல குழு தலைவர் என் சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன் முன்னிலை வகிக்கிறார்.

ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் ஜி. சுந்தர் ராஜன், ஆர். அப்பு ஏ சாலமோன் கே.ராஜேஸ்வரி சத்யா, இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு பேச்சாளர்கள் சென்னை அரங்கநாதன், ரிஷி சந்தோஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், டி..ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலந்தூர் தொகுதி பொறுப்பாளர் பத்மபிரியா, மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் தலைமை பொது குழு உறுப்பினர்கள் எம் எஸ் கே இப்ராஹிம், ஆர் டி பூபாலன் ரா பாஸ்கரன் கீதா ஆனந்தன் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி. சாய் ஜெயகாந்த், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர் ஆர் ஜெயராம் மார்த்தாண்டன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே ஆர் ஆனந்தன், ஆலந்தூர் வடக்குப் பகுதி நிர்வாகிகள் வே.டில்லிபாபு, கோ.கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன்,

எஸ்.ஜெயா, எம்.சையத் அபுதாகிர், ஆலந்தூர் தெற்கு வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஜெ.நடராஜன், இ. உலகநாதன், கே. ஆர்.ஜெகதீஸ்வரன் ஏ.வேலவன், ஏ.ஆர்.சரவணா, ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, ம.கோ. கருணாநிதி, ப. கிருஷ்ண மூர்த்தி, கே. பி.முரளிகிருஷ் ணன், எம். ஆர். சீனிவாசன் ஆலந்தூர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் டி.ஜெயக்குமார், பி.செல்வம், மூ.வெள்ளைச்சாமி, ஜி.வீரராகவன், கோ.பிரபாகரன், என்.பெருமாள், அபிஷேக்கிருஷ்ணா,

பி. வேல்முருகன் வி.ரமணா (எ) வெங்கட்ரமணன் கே.வெற்றிவேல், பி. திருமாறன், கே.பாபுகுமார், ஜி. ஆர். வெங்கடேசன், ச.பூவராகவன், த.மனோகரன், மு.முனியாண்டி, இரா. குணசேகரன், அ.குப்புசாமி, இரா.கீர்த்திராஜ், ம.சத்யா, மாமன்ற உறுப்பினர்கள் ஜே.தேவி, என்.துர்கா தேவி ஜெ.பூங்கொடி, வி.பாரதி, எஸ்.அமுதப்பிரியா, பி.எம். பிருந்தாஸ்ரீ, எஸ்.ரேணுகா மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 164வது வட்டச் செயலாளர் ஏசு (எ) டி. ஜேசுதாஸ் நன்றி கூறுகிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சி, காந்தி நகரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல.ஏ., கழகக் கொடியேற்றி அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து ஏழை எளிய மக்களுக்கு பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கி. வீரம்மாள், பொன். கோதண்டன், பா.சேகர், நா.பரசுராமன், இரத்தினமாலா, சிவகாமி, துளசி, வள்ளி, ஏ.கே.செல்வகுமார், வரதன், கிருஷ்ணமூர்த்தி, அ.ச.அமான், ராஜ், என்.வி.சரவணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.சி.சிவசங்கர், எம்.எஸ். மணிகண்டன், ரூபேஷ். கே.கண்ணன், என்.மணிகண்டன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் மு.சீனிவாசன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.